டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 04.01.2025 சனிக்கிழமை | பக்கங்கள் 25 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 164 - Madurai | Online Edition

## தமிழகத்தில் அடுத்த ஒரு வாரத்திற்கு மிதமான மழைக்கு வாய்ப்பு!

சென்னை, ஜன.3

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அடுத்த ஒரு வாரத்திற்கு லேசானது முதல் மிதமான மழை பெய்ய கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கிழக்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, இன்று 4-01-2025ல் கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.



உள்தமிழகத்தில் பொதுவாக வறண்ட வானிலை நிலவக்கூடும். பொதுவாக காலை வேளையில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

நாளை 5ம் தேதி மற்றும் நாளை மறுநாள் 6ம் தேதிகளில் கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். உள்தமிழகத்தில் பொதுவாக வறண்ட வானிலை நிலவக்கூடும்.

7-01-2025ல் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளை பொறுத்தவரையில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். காலை வேளையில் பொதுவாக லேசான பனி மூட்டம் காணப்படும்.

# 'நெல்லுக்கு ஜிங்க் சல்பேட்-மானிய விலையில் பெற்று இடுவீர்' 10 சதவீதம் வரை கூடுதல் மகசூல் பெறுவீர்!

கிருஷ்ணகிரி, ஜன.3

கிருஷ்ணகிரி வட்டாரத்தில் நடப்பு ஆண்டில் நெற்பயிர் சுமார் 5600 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. நெல் பயிருக்கு அடிப்படையாக தேவைப்படும் ஊட்டச்சத்துக்கள் தழை, மணி, சாம்பல், துத்தநாகம், இரும்பு, காப்பர், மாங்கனீசு ஆகியவை ஆகும். அவற்றுள் தற்போது கிருஷ்ணகிரி வட்டாரத்தில் நெற்பயிரில் துத்தநாகச்சத்து குறைபாடு ஏற்பட வாய்ப்பு அதிகம் காணப்படுகின்றது. இது குறித்து கிருஷ்ணகிரி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வெ.சுரேஷ்குமார் கூறுகையில்,

**துத்தநாக சத்து நெல்லுக்கு ஏன் அவசியம்?**

நெற்பயிர் மண்ணில் உள்ள தழைச்சத்தினை சரியாக உறிஞ்சி எடுக்கவும் - அதன் பயன்பாட்டுத்திறன் அதிகரிக்கவும் துத்தநாக சத்து மிகவும் அவசியம். பயிர் நன்கு வளர்ச்சியடையவும், அதிக தூர் கட்டவும், நெற்கதிர்களில் பால் பிடிக்கும் திறன் மற்றும் கருவுறுதல் சரியாக நடைபெறவும் துத்தநாக சத்து முக்கிய பங்கு வகிக்கின்றது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

## எதனால் துத்தநாக சத்து பற்றாக்குறை ஏற்படுகின்றது?



ஒரே நிலத்தில் தொடர்ச்சியாக நெற்பயிர் சாகுபடி செய்வதால் நிலத்தில் எப்போதும் நீர் தேங்கி கரையா உப்புக்கள் அளவு அதிகரித்து துத்தநாகச் சத்து குறை பாட்டை ஏற்படுத்துகின்றது. மண்ணில் சுண்ணாம்புத் தன்மை அதிகம் இருந்தால் துத்தநாகச் சத்து பயிருக்கு கிடைக்க இயலா நிலை ஏற்படுகின்றது.

## துத்தநாக சத்து பற்றாக்குறை அறிகுறிகள்

பயிர் வளர்ச்சி குன்றி, இளம் இலைகள் மஞ்சள் நிற கோடுகள் கொண்டதாக மாறி காணப்படும். பின்னர் காய்ந்து விடும். நடு நரம்பினை ஒட்டிய பகுதிகள் வெண்மை நிற கோடுகள் உருவாகி இலைகள் வெளுத்து காணப்படும்.இலைத்தாளின் அகலம் குறைந்து சிறுத்து காணப்படும். பயிர்களின் வளர்ச்சி குறைந்து குட்டையாக காணப்படும். நெற் கதிர் தூர்கள் பிடிக்கும் பருவத்தில் தூர்களின் எண்ணிக்கை குறைந்து காணப்படுவ தோடு, மலட்டுத்தன்மையுடன் பதராக காணப்படும். விளைச்சல் குறைவு ஏற்படும்.

## பற்றாக்குறை நிவர்த்தி செய்யும் முறை – மானியம் விவரம்

ஏக்கர் ஒன்றுக்கு 10 கிலோ ஜிங்க் சல்பேட் 20 கிலோ மணலுடன் கலந்து பயிர் நடவு செய்து 5 முதல் 10 நாட்களுக்குள் இடுவது சரியான தருணம், தொடர்ந்து நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் நெல் நாற்று நட்ட பின் 25 முதல் 30 நாட் களுக்குள் இரண்டாவது முறையும் 10 கிலோ ஜிங்க் சல்பேட் இட்டு பயிரின் துத்தநாகச்சத்து பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய லாம். இதனால் பயிரின் மகசூல் 10 முதல் 15 சதவீதம் கூடுதலாக எளிதாக பெறலாம் என்றும், தற்போது கிருஷ்ணகிரி வட்டாரத்தில் மாநில வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஜிங்க் சல்பேட் கிலோ ஒன்றுக்கு ரூ.25 மானியம் என்ற வீதத்தில் ஒரு நபருக்கு 10 கிலோ முழு விலை ரூ.691-ல் ரூ.250 மானியம் நீங்கலாக ரூ.441 மட்டும் செலுத்தி பெறலாம் என தெரிவிக்கப்பட்டது. பெரும்பாலான விவசாயிகள் பயனடைய வேண்டும் எனவும், இடு பொருட்கள் மானிய விலையில் பெற விவசாயிகள் தங்கள் ஆதார், சிட்டா உடன் யுவுஆ கார்டு கொண்டு வந்து பயன்பெற வேண்டும் என கிருஷ்ணகிரி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வெ.சுரேஷ்குமார் கேட்டுக் கொண்டார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
JAIN HI-TECH PLANT FACTORY
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ தாவரங்களின் நாற்றங்கால் மற்றும் அங்கக சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி

கோயம்புத்தூர், ஜன.3

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள் துறையில் வருகின்ற 7.01.2025 செவ்வாய்க்கிழமை அன்று மருத்துவ தாவரங்களின் நாற்றங்கால் மற்றும் அங்கக சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்த ஒரு நாள் பயிற்சி நடைபெற உள்ளது. இதில் விவசாயிகள், பொது மக்கள், அறிவியல் பட்டதாரிகள், நாற்றங்கால் உரிமையாளர், புதிய தொழில் முனைவோர் மற்றும் மகளிர் பங்கு கொண்டு பயன் பெறலாம். இந்த பயிற்சியின் நோக்கமானது மருத்துவ




தாவரங்களின் நாற்றங்கால் மற்றும் முக்கியமான அங்கக சாகுபடி தொழில் நுட்பங்கள் தொடர்பான அறிவு மற்றும் திறன்களை பரப்புவதன் மூலம் தரமான நடவுப் பொருட்களுடன் தரமான மருத்துவ தாவரங்களை வளர்ப்பதை ஊக்குவிப்பதாகும். புதிய தொழில்முனைவோருக்கு நல்ல வருமானம் தரக்கூடியது.

பயிற்சியானது மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள் துறை, தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், கோயம்புத்தூர் என்ற முகவரியில் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறும்.

பயிற்சி கட்டணம் ரூ.1000/- + 18 % GST = ரூ.1180/- (சிற்றுண்டி மற்றும் மதிய உணவு உட்பட)

பதிவுக்கு **Dr.மா.விசாலாட்சி, (98429 31296), மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள் துறை,** தொடர்பு கொள்ளலாம்.

பதிவு செய்ய கடைசி நாள் : 6.01.2025 (மாலை 5.00 மணி).

| கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் | | | | | | | 03.01.2025 |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 1 | கத்திரி(Hybrid) | 30 | 38 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 35 | 40 | 57 | உருளை (பிற) | 30 | 36 |
| 1B | கத்திரி(Nadu) | 50 | 55 | 57A | உருளை(ஊட்டி) | 36 | 48 |
| 2 | வெண்டை | 40 | 48 | 58 | மேரக்காய் | 22 | 26 |
| 3 | தக்காளி (நாடு) | 14 | 18 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 34 | 38 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 14 | 17 | 60 | கேரட் | 45 | 48 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 60 | 68 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 60 | 65 |
| 6 | புடலை | 25 | 28 | 62 | நூல்கோல் | 30 | 35 |
| 7 | பீர்க்கன் | 45 | 48 | 63 | டர்னிப் | 30 | 35 |
| 8 | சுரைக்காய் | 25 | 28 | 64 | மு.கோஸ் | 22 | 26 |
| 9 | பாகற்காய் | 35 | 40 | 65 | மு.கோஸ்(கலர்) | | |
| 10 | கொத்தவரை | 38 | 42 | 66 | காளிபிளவர் | 44 | 48 |
| 11 | பூசணி | 14 | 18 | 67 | பட்டாணி | 85 | 95 |
| 12 | அரசாணி | 16 | 20 | 68 | பூண்டு | 200 | 288 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 40 | 44 | 69 | இஞ்சி | 46 | 90 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 50 | 54 | 70 | புருக்கோலின் | 120 | 130 |
| 15 | சி.வெங்காயம் | 70 | 74 | 71 | பென்னி பீன்ஸ் | 70 | 75 |
| 16 | பெ.வெங்காயம் | 38 | 42 | 72 | குடமிளகாய் | 60 | 65 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 40 | 45 | 73 | ஊட்டி அவரை | 100 | 130 |
| 18 | பச்சை மொச்சை | 50 | 60 | 74 | பஜ்ஜி மிளகாய் | | |
| 19 | முருங்கை | 110 | 130 | 71A | | | |
| 20 | தேங்காய் | 55 | 60 | | | | |
| 21 | மாங்காய் | 80 | 90 | | | | |
| 22 | வாழைக்காய் | 28 | 32 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 40 | 42 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 55 | 60 | 75 | எலுமிச்சை | 60 | 65 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 40 | 50 |
| 26 | மரவள்ளி | 25 | 30 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 40 | 45 | 78 | பப்பாளி | 30 | 34 |
| 28 | கறிவேப்பிலை | 70 | 74 | 79 | மாதுளை | 120 | 180 |
| 29 | கொத்தமல்லி | 30 | 35 | 80 | திராட்சை | 60 | 70 |
| 30 | புதினா | 8 | 9 | 81 | மாம்பழம் | 150 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 18 | 20 | 82 | ஆப்பிள் (சிம்லா/காலா) | 140 | 200 |
| 32 | தண்டுக்கீரை | 18 | 20 | 83 | ஆரஞ்சு | 50 | 70 |
| 33 | சுக்கிட்டி&பாலாக்கு | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 60 | 70 |
| 34 | அரைக்கீரை | 18 | 20 | 85 | அன்னாசி பழம் | 50 | 55 |
| 35 | சிறுகீரை | 18 | 20 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | வெந்தயக்கீரை | 20 | 25 | 87 | முலாம்பழம் | 45 | 50 |
| 37 | பருப்புக்கீரை | 18 | 20 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 40 | 50 |
| 40 | கோவக்காய் | 50 | 60 | 91 | பூவன் | 35 | 38 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 45 | 50 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 35 | 38 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 30 | 35 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 20 | 24 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 30 | 34 | 96 | நேந்திரன் | 65 | 70 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 40 | 45 | 97 | செவ்வாழை | 70 | 80 |
| 47 | சுண்டக்காய் | 150 | 160 | 98 | பேரிக்காய் | 150 | 165 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | | |
| 49 | காளிபிளவர் (உள்ளூர்) | | | 100 | கறிப்பலா | 40 | 44 |
| 50 | நிலக்கடலை | 60 | 65 | 101 | டிராகன் ப்ரூட் | 140 | 150 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 78 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 32 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 30 | 35 | | | | |
| 55A | துவரை | 55 | 60 | | | | |

# விதை கிராம திட்ட பயிற்சி



சேலம், ஜன.3

சேலம் மாவட்டம், வீரபாண்டி வட்டாரம், பாலம்பட்டி கிராமத்தில் தமிழ்நாடு பாசன நவீன வேளாண் திட்டத்தின் கீழ், 20 முன்னோடி விவசாயிகளை கொண்டு பயறு வகைகள் குழுக்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த குழுவிற்கு விதை கிராம திட்ட தொழில்நுட்ப பயிற்சி நடைபெற்றது.

இக்குழுவின் செயல்பாடுகளை ஊக்குவிக்கவும், இடு பொருட் களை வாங்குவதற்கும் சுழல் நிதி குழுவிற்கும் வழங்கப்பட்டு உள்ளது என்று கூறப்பட்டது. பயறு வகை கருவிதையில் இருந்து ஆதாரம் விதைகள் மற்றும் சான்று விதைகள் உற்பத்தி தொழில் நுட்பங்கள், விதைப்பண்ணை அமைத்தல், வயல் ஆய்வு, கலவன் நீக்குதல், விதைகள் கொள்முதல், விதை மாதிரி எடுத்தல், சான்றட்டை பொருத்துதல், சான்று பெற்ற விதைகள் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்குதல் குறித்து எடுத்து கூறப்பட்டது. ஓய்வு பெற்ற துணை வேளாண்மை அலுவலர் கே.பழனிசாமி பயிற்சியாளராக கலந்து கொண்டு பயிற்சி வழங்கினார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் கே.ராஜேந்திரன் அனை வரையும் வரவேற்று இப்பயிற்சியின் முக்கியத்தும் குறித்து எடுத்து கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் ஆ.குமார், சம்பா பருவ பயிர் காப்பீடு திட்டங்கள் பற்றியும் வேளாண் விரிவாக்க மையங்களில் பணமில்லா பரிவர்த்தனை மூலம் இடுபொருட்கள் பெறும் வழிமுறைகள் குறித்தும், உதவி தோட்டக்கலை அலுவலர் செ.சதீஷ், ராபி பருவ பயிர்களான தக்காளி, வெண்டை, கத்தரி, மஞ்சள் சாகுபடி தொழில் நுட்பங்களை பற்றியும், உதவி வேளாண்மை அலுவலர் த.இலக்குவன், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சி.சரஸ்வதி மற்றும் தீபன் முத்துசாமி ஆகியோர் பயிற்சி ஏற்பாடுகளை செய்து இருந்தனர் என்று வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குனர் பா.கார்த்திகாயினி ஒரு அறிக்கையில் கூறியுள்ளார்.


Rithvik Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS : 4985
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# நெல் தரிசு பயிறுவகை சாகுபடியில் உயர் விளைச்சல் இரகங்களும் மற்றும் விதை தரங்களும்

காவேரி டெல்டா பாசனப்பகுதிகளான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை மற்றும் திருச்சி மாவட்டங்களில் 1.46 முதல் 1.6 லட்சம் எக்டரில் உளுந்து மற்றும் பச்சைப் பயிறானது நெல் தரிசில் பயிரிடப்படுகின்றன. காவேரி டெல்டா பாசனப் பகுதிகளில் சம்பா மற்றும் தாளடி நெல் அறுவடைக்கு முன்பாக மெழுகு ஈரப்பதத்தில் பயிறுவகை பயிர்களின் விதைகள் விதைக்கப்பட்டு சாகுபடி செய்யப்படுகிறது.

பெரும்பாலும் இந்த வகை சாகுபடியில் பயறுவகை பயிர்கள் நெல் தரிசில் வயலிலுள்ள ஈரப்பதம் மற்றும் ஊட்டச்சத்துக்களை பயன்படுத்தி சாகுபடி செய்யப்படுவதால் விவசாயிகளுக்கு அதிக உற்பத்தி செலவின்றி வருவாய் கிடைக்கிறது.




பயறுவகை பயிர்களின் உற்பத்தி திறனை அதிகரித்து உயர் விளைச்சல் பெற கீழ்கண்ட முறைகளை பின்பற்ற வேண்டும். சரியான பட்டத்தில் காலத்திற்கேற்றவாறு உயர் விளைச்சல் இரகத்தை தேர்வு செய்து அந்த இரகத்தில் சான்று பெற்ற தரமான விதைகளை விதைப்பு செய்ய வேண்டும். மேலும் ஒரே சமயத்தில் செடிகள் முதிர்ச்சி அடைந்து அறுவடை செய்யத் தகுந்த இரகங்களை பயிரிட வேண்டும். மேலும் இரகங்களின் விதைத் தரங்களாக முளைப்புத்திறன், புறத்தூய்மை, ஈரப்பதம் மற்றும் பூச்சி நோய் தாக்குதல் ஆகியவற்றை அறிந்து நல்ல விதைகளை விதைப்புக்கு பயன்படுத்தவேண்டும். உரிய காலத்தில் தரமான விதைகளை சம்பா, தாளடி நெல் அறுவடை ஆட்கள் மூலம் மேற்கொள்ளப்படும் இடங்களில் அறுவடைக்கு 7 முதல் 10 நாள்களுக்கு முன்பாகவும், இயந்திரம் மூலம் அறுவடை செய்யப்படும் இடங்களில் 4 முதல் 6 நாள்களுக்கு முன்பாகவும் மெழுகு ஈரப்பதத்தில் விதைகள் விதைக்கப்பட வேண்டும்.

மெழுகு பதம் இல்லையெனில் நீர்ப்பாசனம் செய்து, மெழுகு பதம் வந்தபின் விதைகளை விதைக்கவேண்டும். ஒரு சதுர மீட்டரில் 33 செடிகள் அதாவது ஒரு ஏக்கரில் 1,32,000 செடிகள் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

எனவே விவசாயிகள், நெல் தரிசு பயிர் சாகுபடியில் பயறுவகை பயிர்களின் விளைச்சல் திறனை மேம்படுத்தி உயர் விளைச்சல் பெற நெல் தரிசுக்கு தகுந்த வறட்சியை தாங்கும் மற்றும் நோய் எதிர்ப்புத்திறன் அதிகம் உள்ள உயர் விளைச்சல் இரகத்தினை தேர்வு செய்து, இரகங்களின் குணாதிசயங்களை அறிந்து அந்த இரகத்தின் தரமான விதைகளை உபயோகிப்பதன் மூலம் சரியான பயிர் எண்ணிக்கையை பராமரித்து, பயிர்களின் வளர்ச்சிக்கேற்ற தொழில்நுட்பங்களை கையாள்வதன் மூலம் அதிக மகசூல் பெறமுடியும்.




தமிழ்நாட்டில் உளுந்து பயிரில் இதுவரை வம்பன்-3, வம்பன்-4, வம்பன்-5, வம்பன்-6, வம்பன்-7, வம்பன்-8, வம்பன்-11, கோ-5, கோ-6, எடிடீ-3, எடிடீ-5, எடிடீ-6, டி.எம்.வி.1, எபிகே-1 ஆகிய இரகங்கள் பூச்சி நோய் மற்றும் வறட்சி ஆகியவற்றை தாங்கி வளரக்கூடிய நல்ல விளைச்சல் தரவல்ல மேம் படுத்தப்பட்ட இரகங்களாகும்.

இவற்றில் எடிடீ-3, எடீடி-5, எடிடீ-6, வம்பன்-4 போன்ற இரகங்கள் நெல் தரிசு (ஜனவரி) மற்றும் கோடை இறவையில் (பிப்ரவரி) பயிரிட ஏற்ற இரகங்களாகும்.

பாசிபயிறு பயிரை பொருத்தவரை வம்பன் (ஜிஜி) 2, வம்பன் (ஜிஜி) 3, கோ (ஜிஜி) 7, கோ-6, கோ-8, பையூர்-1, விரிஞ்சிபுரம்-1, எடிடீ-3, கே-1, கேம்-2 ஆகிய இரகங்கள் உயர் விளைச்சல் தரவல்ல மேம்படுத்தப்பட்ட இரகங்களாகும். இவற்றில் எடீடி-3, வம்பன் (ஜிஜி)3, கோ (ஜிஜி)7 ஆகிய இரகங்கள் நெல் தரிசில் பயிரிட ஏற்ற இரகங்களாகும்.

விவசாயிகள் அந்தந்த பகுதிகேற்ற இரகங்களை தேர்வு செய்து அதிக விளைச்சல் பெறலாம். இந்திய குறைந்தபட்ச விதைச் சான்றுத் தரங்களின் உளுந்து மற்றும் பாசிபயிறு பயிருக்கு 75 சதவீதம் முளைப்புத்திறன், 98 சதவீதம் புறத்தூய்மை, 9.0 சதவீதம் ஈரப்பதம் மற்றும் பிற இன பயிர்கள், ஒரு கிலோவிற்கு 5ம், சான்று விதைக்கு ஒரு கிலோவிற்கு 10ம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

எனவே விவசாயிகள் விதைகளின் புறத்தூய்மை, ஈரப்பதம், முளைப்புத்திறன் மற்றும் பிற இரக விதைக்கலப்பு ஆகியவற்றை மிக துல்லியமாக அறிந்து கொள்ள அந்தந்த மாவட்ட விதைப் பரிசோதனை நிலையத்தை அணுகி பயன் பெறலாம்.

எனவே திருவாரூர் மாவட்டத்தில் உள்ள விதை உற்பத்தி யாளர்கள், விதை விநியோகம் செய்பவர்கள், விதை விற்பனை யாளர்கள் மற்றும் விவசாயிகள் விதை பரிசோதனை மேற்




கொள்ள 150 கிராம் உளுந்து விதை மாதிரியுடனும், 120 கிராம் பாசிபயிறு விதை மாதிரியுடனும் ஒரு மாதிரிக்கு ரூ.80/- கட்டணத்துடன் விதை பரிசோதனை நிலையம், பெரியமில் தெரு, விஜயபுரம், திருவாரூர் என்ற முகவரியில் அணுகி பயன் பெற அழைக்கப்படுகிறீர்கள்.

இச்செய்தியினை து.சிவவீரபாண்டியன், தஞ்சை சரக விதை பரிசோதனை அலுவலர் மற்றும் திருவாரூர் விதைப் பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் கா. புவனேஸ்வரி மற்றும் வேளாண்மை அலுவலர் சே.சிவசக்தி ஆகியோர் தெரிவித்துள்ளார்கள்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# வெளிநாட்டிற்கு ஏற்றுமதியாகும் ‘ராயல் புல்லட்‘ பச்சை மிளகாய் பற்றி தெரியுமா?



மிளகாயில் எத்தனை ரகங்கள் வெளி வந்தாலும் (பங்காராம், US1081, HYBRID CHILLI, தேஜஸ்வினி ) ராயல் புல்லட் பச்சை மிளகாய் அதிக காரத் தன்மை உள்ளதாலும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால் இந்த ரக புல்லட் மிளகாய் சாகுபடி செய்யப்படுகிறது.

**ராயல் புல்லட்-யின் சிறப்பு அம்சம்**

உள்ளூர் ரகத்தைவிட 10-12 நாட்களுக்கு முன்னதாக முதிர்ச்சி அடையும் பச்சை மிளகாய் பார்ப்பதற்கு ‘புல்லட் வடிவில் இருக்கும். பச்சையாக பயன்படுத்த மிக சிறந்ததாக உள்ளது. அதிக காரத்தன்மையுடன் 80,000-90,000 SHU உடையது. இதை புல்லட் சில்லி என்றும் அழைக்கப்படுகிறது. அதிக காரத்துடன் மணமும் இருப்பதால் வெளிநாடுகளில் நல்ல கிராக்கி உள்ளது.

**சாகுபடி தொழில்நுட்பங்கள்**

ஒரு எக்கருக்கு 8000-10000 ஆயிரம் நாற்றுகள் வரை தேவைபடும். நாற்று அழுகல், வேர் அழுகல் நோயை கட்டுப் படுத்த டி.விரிடி மருந்தில் நாற்றுகளை முக்கி நடவு செய்ய வேண்டும்.

**இடைவெளி**

60X45 செ.மீ

**களை நிர்வாகம்**

களைகளை கட்டுப்படுத்த பெண்டிமெத்தலின் 600 மி.லி மருந்து தெளிக்க வேண்டும்.

**உர அளவு** - 24:24:12

சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்த இமிடாகுளோபிரிட் ஏக்கருக்கு 80 மி.லி மருந்து தெளிக்க வேண்டும். செடியின் வளர்ச்சி நன்றாக இருக்க இலைவழி தெளிப்பாக 19:19:19 உரத்தை FOLIAR SPRAY செய்யலாம்.

40-50வது நாளில் செடிகள் நன்றாக வளர்ந்து பூ, பிஞ்சுகள் வரும். பூக்கள் உதிர்வதை தடுக்க NAA (PLANOFIX ) வளர்ச்சி ஊக்கி தெளிக்க வேண்டும்.

85-90 நாட்களில் காய்கள் அறுவடைக்கு தயாராகிவிடும். 2வது அறுவடை முடிந்தவுடன், உரமிட வேண்டும். இவ்வாறாக 6-8 அறுவடை வரை எடுக்கலாம்.




அறுவடை செய்யப்படும் ராயல் புல்லட் மிளகாயை தரம் பிரித்து, முதல் தரக்காய்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி ஆகின்றன. மற்ற தர பச்சை மிளகாயை உள்ளூரில் விற்பனை செய்யப்படுகிறது.

ஏக்கருக்கு 8 முதல் 10 குவிண்டால் வரை மகசூல் கிடைக்கலாம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# பதிவுச்சான்றிதழ் பெறாத போலி விதைகளை விற்றால் நீதிமன்ற நடவடிக்கை!

## ஈரோடு விதை ஆய்வு துணை இயக்குநர் எச்சரிக்கை

ஈரோடு, ஜன.3

தமிழ்நாட்டில் பல முன்னணி விதை உற்பத்தி நிறுவனங்கள் விதைகளை உற்பத்தி செய்து அதனை சந்தையில் விற்பனை செய்து விவசாயிகளுக்கு வழங்கி வருகின்றனர். விதைகளின் தரத்தினை உறுதி செய்ய விதை ஆய்வாளர்கள் தங்கள் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள விதை விற்பனை நிலையங்களில் ஆய்வு மேற்கொண்டு விதை கொள்முதல் ஆவணங்கள், பதிவுச்சான்றிதழ், முளைப்புத்திறன் அறிக்கை, விதை இருப்புப் பதிவேடு, விதை விற்பனை பட்டியல் ஆகியவை மீது ஆய்வு மேற் கொண்டு கண்காணித்து வருகின்றனர்.

புதிய பயிர் இரகம் – வீரிய இரக விதைகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் பற்பல இடங்களில் வயல் சோதனைத் திடல் அமைத்து, அந்த இரகம் அந்தந்த பகுதிக்கு ஏற்றத்தக்கதாகவும் அந்தந்த தட்பவெப்ப காலநிலைக்கு ஏற்புடையது என்பதை உறுதி செய்த பின்னரே அதன் அடிப்படையில் விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறையில் பதிவு செய்து பதிவுச் சான்றிதழ் பெறுவது அவசியமாகும்.

தற்போது இப்பதிவு முறையில், ஒரு இரகம் அல்லது வீரிய இரகத்திற்கான பதிவு முறையினை தமிழ்நாடு அரசு திருத்தம் செய்துள்ளது. இதன் மூலம் முன்னணி நிறுவனங்களின் இரகங்களை மாற்றுப் பெயரிலோ அல்லது போலியான பெயரிலோ விற்பனை செய்வது தடுக்கப்பட்டு விவசாயிகளுக்கு நல்ல தரமான விதைகள் கிடைக்க வழிவகை செய்யப்பட்டு வருகிறது.

விதை விற்பனை பாக்கெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ள பதினான்கு வகையான விபரங்களில் முக்கியமாக விதையின் வகை, இரகம், குவியல் எண், காலாவதி நாள், நிகர எடை, பயிர் செய்ய பரிந்துரைக்கப்படும் இடங்கள், பரிந்துரைக்கப்படும் காலச் சூழ்நிலை ஆகிய தகவல்களை நன்கு அறிந்த பின்னரே விவசாயிகள் விதைகளை வாங்க அறிவுரை வழங்கப்படுகிறது.

விதையின் இரகத்திற்கு விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறையினால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ் பெறப்பட்டுள்ளதா? புதுப்பிக்கப்பட்டுள்ளதா? என்பதை அறிந்த பின்னரே விவசாயிகளுக்கு விற்பனை செய்ய வேண்டும். மேலும், விதைக் குவியலின் முளைப்புத்திறன் அறிக்கை தேர்ச்சி பெற்றுள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும். மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளையோ,போலியான விதைகளையோ, வெளிமாநிலத்திலிருந்து உரிய அனுமதிச் சான்று பெறாத விதைகளையோ விற்றால் விதை விற்பனை யாளர்கள் மீது விதைச்சட்டம் 1966, விதைவிதிகள் 1968, விதை கட்டுப்பாட்டு ஆணை 1983 ஆகியவற்றின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஈரோடு மாவட்ட விதை ஆய்வு துணை இயக்குநர், பெ.சுமதி எச்சரிக்கை விடுத்துள்ளார்.




மேலும் விவசாயிகள் விதைகள் குறித்த புகார் இருந்தால் கீழ்க்கண்ட விதை ஆய்வாளர்களை தொடர்பு கொண்டு தங்கள் புகார்களை தெரிவிக்கலாம்.

விதை ஆய்வாளர், ஈரோடு - 99448 43823

விதை ஆய்வாளர், பவானி - 95851 10662

விதை ஆய்வாளர், கோபி மற்றும் காங்கேயம் - 79049 58939

விதை ஆய்வாளர், சத்தி - 88702 72424

விதை ஆய்வாளர், தாராபுரம் - 97153 59078

இதனை, பெ.சுமதி, விதை ஆய்வு துணை இயக்குநர், ஈரோடு தெரிவித்தார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# உரிமம் பெற்ற விதை விற்பனை நிலையங்களில் விதைகள் வாங்கிட விவசாயிகளுக்கு வேண்டுகோள்

சேலம், ஜன.3

விவசாயிகள் பயிரிடும் பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை அதிகரிக்கச் செய்யும் பல்வேறு காரணிகளில் விதைகளின் பங்கு முக்கியமானதாகும். எனவே விவசாயிகள் தங்களுக்கு தேவையான உயர் விளைச்சல் தரும் இரகங்கள் / வீரிய ஒட்டு விதைகளை விதை விற்பனை உரிமம் பெற்ற விற்பனை நிலையங்களில் மட்டுமே வாங்கி பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டப் பகுதிகளில் விற்பனை செய்யப்பட்டு வரும் பல்வேறு வகையான பயிர்களின் உண்மை நிலை விதைகளை விவசாயிகள் வாங்கும் போது தற்போது நிலவும் பருவம், பகுதிக்கு ஏற்றதா என்ற விபரம் மற்றும் இரகத்தின் வயது குறித்து விபரங்கள் அறிந்து விதைகள் வாங்க வேண்டும். விலைப்பட்டியல் பெறும் போது பட்டியலில் பயிர், ரகம், நிலை, வாங்கிய அளவு குவியல் எண், காலாவதி நாள், பட்டியல் முகவரி, தொடர்பு எண் குறிப்பிட்டுள்ளதா எனஅறிந்து விதை களை வாங்க வேண்டும். அதேபோல விதை விற்பனை யாளர்கள் நிர்ணயிக்கப்பட்ட விலையில் விதைகளை விற்பனை செய்ய வேண்டும். விற்பனையாளர்கள் விற்பனை செய்யும் விதைகளுக்கு உரிய முளைப்புத்திறன் முடிவுகள் மற்றும் இதர வெளிமாநில சான்று பெற்ற விதைகளுக்கு படிவம் 2 ஆகியவை பராமரிக்க வேண்டும். விதைகள் இருப்பு வரப்பெற்றவுடன் பணி விதை மாதிரிகள் சேகரித்து சம்மந்தப்பட்ட விதை பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பி முளைப்புத்திறன் முடிவுகளில் தேர்ச்சி பெற்ற விதை களை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும் விவர அட்டை குறைபாடுகள் உள்ள விதைகள் மற்றும் காலாவதியான விதை களை விற்பனை செய்யக் கூடாது. விதிமுறைகளை மீறி கூடுதல் விலையில் விவசாயிகளுக்கு விற்பனை செய்யும் விற்பனையாளர்கள் மற்றும் விதை விற்பனை நிலையங்களில் பராமரிக்க வேண்டிய ஆவணங்கள் பராமரிக்காத விதை விற்பனையாளர்களின் மீது விதைச்சட்டம் 1966 மற்றும் விதை க்கட்டுப்பாட்டு ஆணை 1983 ஆகியவற்றின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனை, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்ட விதை ஆய்வு துணை இயக்குநர் க.சித்ரா தெரிவித்தார்.

# செக்காருலு கிராமத்தில் ராபி பருவம் குறித்த விவசாயிகள் பயிற்சி



கிருஷ்ணகிரி, ஜன.3

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டாரம், வேளாண்மை துறை மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் கீழ் (அட்மா) 2024-25ம் ஆண்டிற்கான செக்காருலு கிராமத்தில் ஊராட்சியில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தில் ராபி பருவ கிராம வேளாண் முன்னேற்ற குழு குறித்த பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சிக்கு வேளாண்மை உதவி இயக்குநர் பன்னீர் செல்வம் தலைமை தாங்கினார்.




இக்கூட்டத்தில் ஊராட்சி மன்ற தலைவர் சிக்கபையா, அதியமான் கல்லூரி முதல்வர் ஸ்ரீதரன், பட்டு வளர்ச்சித் துறை இளநிலை ஆய்வாளர் கல்யாணசுந்தரம், உதவி தோட்டக்கலை அலுவலர் திருவேங்கடம், உதவி வேளாண்மை அலுவலர் தமிழ் செல்வி, வேளாண்மை அலுவலர் பவித்ரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

வேளாண்மை உதவி இயக்குநர் கூறியதாவது கிராம முன்னேற்ற குழுவின் நோக்கம் செயல்படும் விதம், திட்டங்கள் மற்றும் மானியங்கள் மக்களிடையே சேர்த்தல், சிறுதானி யங்கள் மற்றும் பயறு வகைகளின் பயன்கள் அதனால் நமக்கு ஏற்படும் நன்மைகள் குறித்தும், விவசாயிகள் சிறுதானியம் மற்றும் பயறு வகைகளை பயிரிட்டு மானியங்களை பெற்று கொள்ளலாம் என்று கூறினார். இதற்குண்டான விதைகள் மானிய விலையில் வேளாண் விரிவாக்க மையங்களில் கிடைக்கும் என்றும் விவசாயிகள் விதைப்பண்ணைகள் அமைத்து கூடுதல் இலாபம் அடையலாம் என்றும் கூறினார்.

கிராம வேளாண் முன்னேற்ற குழு சிறப்பாக செயல்பட்டு இயற்கை பண்ணையம் அமைத்து நோயற்ற வாழ்வும் இரட்டிப்பு இலாபம் அடையலாம். மேலும் ஒருங்கிணைந்த பண்ணையம் அமைப்பதன் மூலம் குறைந்த செலவில் இரட்டிப்பு இலாபம் அடையலாம் என்று கூறினார். இதற்கு கிராம வேளாண் முன்னேற்ற குழுவானது சிறப்பாக செயல்பட்டு மற்ற விவசாயி களுக்கு முன்னோடிகளாக இருக்க வேண்டும் என்று கூறினார்.

அதியமான் கல்லூரி முதல்வர் ஸ்ரீதரன் கோடை உழவு செய்வதன் அவசியம் அதனால் ஏற்படும் பயன்கள் மண் மாதிரியின் பயன்கள் மற்றும் மண் மாதிரிகள் சேகரிக்கும் முறைகள் குறித்த செயல் விளக்கம் செய்து காண்பித்தார். பட்டு வளர்ச்சித்துறை இளநிலை ஆய்வாளர் கல்யாணசுந்தரம் தமது துறை சார்ந்த திட்டங்கள் மற்றும் மானியங்கள் குறித்து விளக்கி கூறினார்கள்.

உதவி வேளாண்மை அலுவலர் தமிழ்செல்வி நடப்பாண்டில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தில் பேட்டரி தெளிப்பான், ஜிப்சம், ஜிங்க்சல்பேட் மற்றும் தானி யங்கள் மானிய விலையில் விநியோகிக்கப்படும் என்று கூறினார்.

உதவி தோட்டக்கலை அலுவலர் திருவேங்கடம் தோட்டக்கலை துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள், மானியங்கள் இலவச மாக வழங்கப்படும் நாற்றுகள், மல்ச்சிங் ஷீட், நீர் சேமிப்பு தொட்டி, 5 வகையான பழ செடி தொகுப்பு மானிய விலையில் கிடைக்கும் என்று கூறினார்.

ஊராட்சி மன்ற தலைவர் சிக்கபையா நம் செக்காருலு கிராமத்தில் அரசு வழங்கிய கலைஞரின் அனைத்து கிராம ஒருங் கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் மானியங்கள் மற்றும் இடுபொருட்கள் விவசாயிகள் வாங்கி பயன் அடையவேண்டும் என்று கூறினார்.

இறுதியாக இப்பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு இடு பொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டது. இப்பயிற்சியில் சொட்டு நீர் பாசன நிறுவனத்தார் கலந்து கொண்டனர். மேலும் பாரம்பரிய நெல் இரகங்கள் மற்றும் சிறு தானியங்கள் கண்காட்சி இடம் பெற்றிருந்தது.

உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் கா.ம. முஹம்மது ரஃபி மற்றும் பி.பழனிச்சாமி ஆகியோர் சொட்டுநீர்பாசனத்தின் பயன்கள் அரசு வழங்கும் மானியங்கள் குறித்து விளக்கி கூறினார். உழவன் செயலியின் பயன்கள் மற்றும் உழவன் செயலி விவசாயிகளுக்கு பதிவிறக்கம் செய்தும் உயிர் உரங்கள் மற்றும் நுண்ணூட்ட உரங் களின் பயன்கள் குறித்தும் விளக்கி கூறினார்கள். இப்பயிற்சிக் கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் செய்திருந்தனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# வல்லுநர் விதை உற்பத்தி திடலில் கண்காணிப்பு குழு ஆய்வு



திருச்சி, ஜன.3

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மற்றும் வேளாண் ஆராய்ச்சி நிலையங்கள் மூலம் ஒவ்வொரு ஆண்டும் வெளியிடப்படும் உயர் விளைச்சல் தரும் பயிர் இரகங்களின் கரு விதைகளைக் கொண்டு திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள சிறுகமணி கரும்பு ஆராய்ச்சி நிலையம், அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நவலூர் குட்டப்பட்டு, வேளாண்மைக் கல்வி நிலையம், குமுளூர் ஆகிய வேளாண் கல்லூரிகள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் விதை பண்ணைகள் அமைத்து வல்லுநர் விதை உற்பத்தி செய்து, மாநில அரசு விதை பண்ணை களுக்கு விதை பெருக்கத்துக்காகவும், விவசாயி களுக்கு சாகுபடிக்காகவும் வழங்கப்படுகிறது. இவ்வாறு அமைக் கப்படும் விதை பண்ணைகளை ஆய்வு செய்து, வயல் ஆய்வு தரத்தை துல்லியமாக கடைப்பிடித்து தரமான விதைகளை உற்பத்தி செய்வதை உறுதி செய்திடும் பொருட்டு, வல்லுநர் விதை உற்பத்தி கண்காணிப்பு குழு அமைத்து ஆய்வு செய்யப்படுகிறது.

விதைப்பண்ணையில், பூப்பருவம், அறுவடை பருவம் மற்றும் விதை குவியல் நிலைகளிலும், விதைசுத்தி நிலைகளில் சுத்தி பணியின் போதும் ஆய்வு செய்து, விதையின் தரம் உறுதி செய்யப்படுகிறது. இந்நிலையில் நடப்பு பருவத்தில் நெற்பயிரில் சிறுகமணி, ஆராய்ச்சி நிலையத்தில் CO(R)50 மற்றும் ADT 39, அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நவலூர் குட்டப்பட்டில்-TRY-1, TRY- 3,TRY-4, குமுளூர் வேளாண்மை கல்வி நிலையத்தில் மேம் படுத்தப்பட்ட வெள்ளை பொன்னி (IW PONNI) ஆகிய இரகங் களின் வல்லுநர் நிலை விதை பண்ணை அமைக்கப்பட்டு, விதைப்பண்ணையில் பூப்பருவம் மற்றும் முதிர்ச்சி பருவ நிலையில் உள்ளன. 2.01.2025 அன்று குமுளூர் வேளாண் கல்வி நிலையத்தில் அமைத்துள்ள விதை பண்ணையை அன்பில் தர்மலிங்கம்

வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் முனைவர் ஹரிபாபு, சிறுகமணி, வேளாண் நிலைய பேராசிரியர் முனைவர் சகிலா, திருச்சிராப்பள்ளி, விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் பா.நளினி, விதைச் சான்று அலுவலர்கள் கி.வேல்முருகன் மற்றும் ச.ரமேஷ் ஆகியோர் அடங்கிய வல்லுநர் விதை உற்பத்தி கண்காணிப்பு குழு ஆய்வு செய்தது. ஆய்வின் போது, விதைப் பயிர் நடவுமுறை, விதைப் பயிரில் பிற ரக கலவன்கள், பயிர் விலகு தூரம், குறித்தறியப்பட்ட நோய்கள் போன்றவற்றை ஆய்வு செய்தனர். மேலும், தரமான வல்லுநர் விதைகளை உற்பத்தி செய்திட தேவையான அனைத்து நடைமுறை களையும் கடைப்பிடிக்க களப்பணியாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.



# நாவகுறிச்சி வேளாண் முன்னேற்ற குழுவினருக்கு ராபி பருவ சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி



சேலம், ஜன.3

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரத்தில் வேளாண்மை துறை சார்பில் நாவகுறிச்சி கிராம வேளாண் முன்னேற்ற குழுவினருக்கு ராபி பருவ பயிற்சி அளிக்கப்பட்டது. வேளாண்மை உதவி இயக்குனர் கவிதா தலைமை தாங்கினார்.

வேளாண்மை அலுவலர் ஜானகி மண்வளம் மற்றும் ராபி பருவத்திற்கு ஏற்ற வேளாண் பயிர்கள் சாகுபடி பற்றி விரிவாக விவசாயிகளுக்கு எடுத்து கூறினார். உதவி தொழில்நுட்ப மேலாளர் முத்துவேல் தனது உரையில் உழவன் செயலி பயன்பாடு, கிசான் கடன் அட்டை பெறுதல் குறித்து கூறினார்.




உதவி வேளாண்மை அலுவலர் பிரகாஷ் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தில் செயல்படுத்தப்படும் மானிய திட்டங்களை பற்றி விளக்கினார். வட்டார தொழில்நுட்பம் மேலாளர் சக்தி உயிர் உரங்களின் பயன்கள், நுண்ணூட்டங்களின் முக்கியத்துவம், நெல் சாகுபடி பற்றி எடுத்துரைத்தார். உதவி தோட்டக்கலை அலுவலர் ராமு தோட்டக்கலை துறையில் செயல்படுத்தப்படும் மானிய திட்டங்கள் பற்றி கூறினார். கால்நடை மருத்துவர் சக்திவேல் கால்நடை துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து கூறினார். மாடு, ஆடு தடுப்பூசி போடுவதின் முக்கியத்துவம் பற்றி விளக்கினார். உதவி தொழில்நுட்ப மேலாளர் ரமேஷ் நன்றி கூறினார். பயிற்சியில் 40-க்கு மேற்பட்ட விவசாயிகள் பங்கு பெற்றனர்.

# பெருந்துறை வட்டாரத்தில் கிராம வேளாண் முன்னேற்றக் குழு விவசாயிகள் பயிற்சி



ஈரோடு, ஜன.3

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டாரம் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் வாயிலாக செயல்படுத்தப்படும் மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் 2024-2025 ஆம் ஆண்டுக்கான கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டகிராமத்தில் கிராமவேளாண் முன்னேற்றக்குழு அமைக்கப்பட்டு அக்குழுக்களுக்கு ராபி பருவ விவசாயிகள் பயிற்சியானது பொன்முடி கிராமத்தில் நடைபெற்றது.

இதில் பெருந்துறை வேளாண்மை உதவி இயக்குநர் க.பிரசாத் தலைமையிலும் ஊராட்சி மன்ற தலைவர் தங்கவேல், முன்னிலை வகித்தார். கிராம வேளாண் முன்னேற்றக்குழு அமைத்ததன் முக்கிய நோக்கமான தரிசு நிலங்களை சாகுபடிக்கு கொண்டு வருதல், நீர் ஆதாரங்களை பெருக்குதல் மற்றும் சூரிய மின்சக்தியின் மூலம் பம்பு செட்டுகள் அமைத்தல் மற்றும் வேளாண் இடுபொருட்களின் மானிய விபரங்களையும் நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் குறித்தும் அவற்றை கட்டுப்படுத்தம் முறை குறித்தும் தெளிவாக விளக்கினார்.

மேலும் தோட்டக்கலை வேளாண்மை அலுவலர் ஜீவிதா மற்றும் உதவி செயற்பொறியாளர் நவின் தங்கள் துறை சார்ந்த திட்டங்கள் பற்றியும் அவற்றை செயல்படுத்தும் முறை பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர். இயற்கை விவசாயி கணேசன் பேசுகையில் பூச்சி விரட்டி, பஞ்சகாவியம் தயாரித்தல் பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர். உதவி வேளாண்மை அலுவலர் கோகிலா பேசுகையில் PM Kisan பற்றிய விவரங்களை கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடு களை உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் செய்திருந்தனர்.